செ.கு.எண்: 47 நாள்: 31/01/2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 31.1.2012

தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரம், தோம்மையார் கோவில் தெருவைச் சேர்ந்த திரு. மதன், சீமோன்ஸ் மற்றும் திரு. அகஸ்டின் ஆகிய மூவரும் பைபர் படகில் 29.1.2012 அன்று மீன் பிடிக்கச் சென்ற போது வேம்பாருக்கும் வைப்பாருக்கும் இடைப்பட்ட கடல் பகுதில் படகு கவிழ்ந்ததில் திரு.அகஸ்டின் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திரு. அகஸ்டின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவத்தில் காலமான அகஸ்டினை இழந்து வாடும் அவருடைய குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9